Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 07, 2024

புதன்கிழமை ஆகஸ்ட் 07, 2024 | ஒளி: 10 கதிர் 023 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## 99 முறைப்பாடுகள்

ஜூலை 31ஆம் திகதி முதல், ஆகஸ்ட் 5ஆம் திகதி பிற்பகல் 5 மணி வரை, சட்டத்தை மீறியமை தொடர்பிலான தேர்தல் முறைப்பாடுகள் 99 கிடைத்துள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 68 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 31 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.



## கட்டுப்பணம் செலுத்தினார் அநுர

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை, செவ்வாய்க்கிழமை (06) வைப்பிலிட்டார்.

இலங்கையை புதிய மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி உயர்த்தி வைக்கின்ற திடசங்கற்பத்துடன் இத்தடவை ஜனாதிபதி தேர்தலுக்காகப் போட்டியிட அநுர குமார திசாநாயக்க முன்வந்துள்ளதாகத் தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

### மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம்

# தேர்தல் குண்டா?



மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்ட தேர்தல் குண்டாகவே தாம் கருதுகின்றோம் என்று தேசிய சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், செவ்வாய்க்கிழமை (06) காலை 9.30க்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பியே இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கமே மாகாண சபைகள் தேர்தலைக் கால வரையறையின்றி ஒத்திவைத்தது. இப்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுக் கூடிய விரைவில் அந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

### மனோ அணி

## சஜித்துக்கு ஆதரவு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்கத் தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.


கொழும்பு - ஜானகி ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

## நாமல் இராஜினாமா



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ, சர்வதேச தொடர்புகள் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன,

தொடர்ச்சி P2



### மூத்த பிரஜை வைப்புகளுக்கு

## வட்டி வீதம் அதிகரிப்பு

60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு சந்தோஷமான அறிவிப்பொன்றை அரசாங்கம் விடுத்துள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமகாலத்தில் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வீதம் 8.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதனால், அதிகமான மூத்த பிரஜைகளின் வைப்புக்களிலிருந்து பணத்தை மீளப் பெற்றுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளின் உயர்ந்த பட்சம் ஒரு மில்லியன் ரூபாய் வரைக்குமான நிலையான வைப்புக்களுக்கான வருடாந்த வட்டி வீதத்தை 10 சதவீதமாக இரண்டு வருடங்களுக்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## கையை தேடுகிறார் ஆணைக்குழு தவிசாளர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்த பிரிவைக் கையாள வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபரிடம் எழுத்து மூலம் கேட்டுள்ளது.

இதனால், சட்டமா அதிபரிடமிருந்து தீர்மானம் கிடைத்தவுடன் ஆணைக்குழு கூடி இவ்விடயம் தொடர்பில் முடிவெடுக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் கடமைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தப் பக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பிரச்சினை எழுந்துள்ள நிலையில், சட்டமா அதிபரிடம் பின்வருமாறு கருத்துக் கேட்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## மின்சாரம், எரிபொருள் அத்தியாவசிய சேவை

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

மின் விநியோகம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## "மீட்சியாளர் அல்லர்; ரணில் பங்குதாரர்"

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் ஏனைய ஜனாதிபதித் தேர்தல்களை விட மிக முக்கிய தருணத்தைக் கொண்டமைகிறது என பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2




### தமிழ் பொது வேட்பாளர்

## புதன், வியாழன் முடிவு

■ நிதர்சன் வினோத்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராகப் போட்டியிடத் தெரிவு செய்யப்பட்ட இரு வேட்பாளர்களில் இறுதியாக ஒருவரின் பெயரைத் தெரிவு செய்வதில், திங்கட்கிழமை (05) நீண்டநேரம் விவாதம் இடம்பெற்ற நிலையில், பொது வேட்பாளர் தொடர்பான

தொடர்ச்சி P2



## பங்களாதேஷ் நிலைவரத்தை இலங்கையோடு ஒப்பிடுவது ஏன்?

பங்களாதேஷ் நிலைவரத்தை இலங்கையோடு ஒப்பிட்டுத் தொடர்ந்தும் கருத்துக்களை முன் வைப்பது ஏன்? அதேபோன்று இலங்கையிலும் மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்றா எதிர்க்கட்சியினர் கூற வருகின்றனர்? தவறான தீர்மானங்கள் மூலமே மீண்டும் நெருக்கடிகளே ஏற்படும் என்பதை நாட்டில் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### பணக்காரர்களுக்கு மொட்டை

## "வாடகைக்கு விட முடியாது"

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு ரணில் விக்ரமசிங்க ஒருபோதும் முயற்சிக்கவில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்சியாக இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி எப்போதும் கூறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் விசேட கலந்துரையாடல் பத்தரமுல்லையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் திங்கட்கிழமை (05) நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, ரமேஷ் பத்திரன, அலி சப்ரி மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக மாவட்ட மட்டத்தில் மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியதாவது,

கேள்வி - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஜனாதிபதி பிளவுபடுத்தியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதைப் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

தொடர்ச்சி P2



### மன்னார் இளம் பட்டதாரி தாய் மரணம்:

## சிலர் தவறிழைத்தமை அம்பலமானது

■ எஸ்.ஆர்.லெம்பேட்

சிலர் தவறிழைத்தமையால், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பட்டதாரியான இளம் தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தமை அம்பலமானது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கையை தேடுகிறார் ஆணைக்குழு தவிசாளர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மைத்திரிபால சிறிசேன அணி, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அணி, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அணி என மூன்று அணிகளாகப் பிளவுபட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேனவின் கட்சி தனி வேட்பாளரை முன்வைக்கும் அதே வேளையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கட்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கச் சபை உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் தரப்பினர் தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேன தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சின்னம் கை என்பது குறிப்பிடத்தக்கது.

## "மீட்சியாளர் அல்லர்; ரணில் பங்குதாரர்"

பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் பல்பரிமாண மாற்றம் ஒன்றை நாடு வேண்டியிருக்கும் வேளையில் இந்த ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. மறுபுறம் நான் தான் இந்த நிலையிலிருந்து காப்பாற்றினேன் என்று பொய்களை சமூகமயப்படுத்தும் போக்கை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வருகிறார்.

பிடகோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார மீட்சி தொடர்பான பொய்யான விடயங்களை சமூகத்துக்குக் காண்பிக்கிறார். அவர் மீட்சியாளர் அல்ல. அவரும் இந்த பொருளாதார பிரச்சினையின் பங்குதாரர் தான் என்றார்.

வேறுயாரும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதனால் நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டேன் என கூறுவது முற்றிலும் பிழையான கருத்தாகும். நிபந்தனைகளுடன் சஜித் கடிதம் அனுப்பினார். அதைப் பொருட்படுத்தவில்லை. சரத் பொன்சேகா தனது விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்கும் கடந்த அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அவர்களாகக் கொடுத்த பதவியைத் தானாக ஏற்றுக்கொண்டார் அவ்வளவு தான்.

ரணில் விக்ரமசிங்கவிடம் எந்த தீர்வும் இல்லை. தீர்வுகளுக்கு அவர் பதிலாக அமையவில்லை. பிரச்சினையின் பங்குதாரர் தான் ரணிலும். பொருளாதார மீட்சி தொடர்பாக அவர் பொய்யான தோற்றப்பாடுகளை சமூகத்தில் ஏற்படுத்துகிறார்.

தலைமைத்துவம், வேலைத்திட்டம் மற்றும் சிறந்த அணி என்பவற்றைக் கொண்ட தரப்பினராலேயே நாட்டை கட்டியெழுப்ப முடியும். இது ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியிலேயே காணப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சி என்பது வெறுமனே இலக்கங்களைக் கொண்ட ஒன்றல்ல. அது மக்கள் சார்ந்ததுமாகும். பொருளாதார வளர்ச்சி காணப்படுமாக இருந்தால், அது மக்களிலும் பிரதிபலிக்கும். ரணில் விக்ரமசிங்கவுடன் இருக்கும் சிறிய தரப்பினரோடு மாத்திரம் இந்த பொருளாள சுருங்கியதல்ல. ஒட்டு மொத்த மக்களிடமும் இந்த பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும். அது தான் உண்மையான பொருளாதார வளர்ச்சியாகும். மக்களை விடுத்து இலக்கங்களில் கவனம் செலுத்துவதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படாது.

ஒட்டுமொத்த மக்களையும் இலக்காகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியையே சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணி முன்னெடுத்துள்ளது. நட்பு வட்டார நண்பர் கூட்டத்தை மாத்திரம் போஷிக்கும் ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார கொள்கையால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. மக்கள் எங்களுக்கு முக்கியம் இதுவே சஜித்துக்கும் ரணிலுக்கும் இடையிலான வித்தியாசமாகும் என்றார்.

# தேர்தல் குண்டா?

இந்நிலையில், குறுகிய காலத்திற்குள் மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை கொண்டுவருவதன் நோக்கம் என்ன? என்று வினவினார்.

மாகாண முதலமைச்சருக்கு விருப்பமான ஆளுநரை நியமித்தால் பொலிஸ் பிரகடனம், சுற்றுச்சூழல் பிரகடனம் மற்றும் காணி பிரகடனம் உள்ளிட்டவற்றை மொத்தமாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால் மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தில் அன்று ஜே.ஆர்.ஜயவர்தன எதிர்பார்த்த பாதுகாப்பு வலைகள் அனைத்தும் நீங்கிவிடும் என்றும் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதனை இவர்கள் கொண்டுவருவதானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான குண்டாகவே நாங்கள் கருதுகின்றோம். இது நியாயமானது அல்ல என்றார்.

இது உங்களுக்கும் எங்களுக்கும் மட்டுமல்ல வடக்கில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகும். இதனால் இந்த நேரத்தில் இவ்வாறான தேர்தல் குண்டுகளைப் பயன்படுத்த இடமளிக்க வேண்டாம் என்று கேட்கின்றோம் என்றார்.

## புதன், வியாழன் முடிவு

இறுதிமுடிவு புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை அறிவிக்கப்படும் என தமிழ் பொதுச்சபையின் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில், திங்கட்கிழமை (05) இடம்பெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு, தமிழ் பொது வேட்பாளரை இறுதி செய்யும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. தமிழ் பொது வேட்பாளராகக் களமிறக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்வதற்காகப் பல மணி நேரமாகத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆலோசனை நடத்தியபோதும், பொது வேட்பாளரை இறுதி செய்ய முடியவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தமிழ் பொது வேட்பாளர் யார்? என்பது இறுதி செய்யப்பட்டு இன்னும் இரண்டொரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## பங்களாதேஷ் நிலைவரத்தை இலங்கையோடு ஒப்பிடுவது ஏன்?

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற மாத்தறை நில்வலா கங்கை அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் பேசுகையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னைய நிலைமையைப் பார்க்கும்போது அதிலிருந்து மீள முடியும் என எவரும் நம்பவில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தைச் சிறந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

நாம் அதற்கு முன்பிருந்த பழைய நிலைக்கு வராவிட்டாலும் அதைவிட நல்லதொரு நிலைக்கு வர முடியும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

உணர்வுகளுக்கு அடிபணியாமல் சிந்தித்துச் செயல்பட வேண்டும், அதனையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செய்துள்ளார்

அன்றைய நிலை தொடர்பில் சிந்தித்து தற்போது நாம் எங்கு உள்ளோம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

பங்களாதேஷ் நிலைமைகள் தொடர்பில் உண்மையில் நாம் கவலையடைகின்றோம். அது தொடர்பில் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் கவனத்தில் எடுத்துள்ளனர். எனினும் அதனை இலங்கையோடு ஒப்பிட்டுத் தொடர்ந்தும் கருத்துக்களை முன் வைப்பது ஏன்? என நான் கேட்க விரும்புகின்றேன். அதேபோன்று எதிர்க்கட்சியினர் மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்றா கூற வருகின்றனர்? நாம் நீதியை நிலைநாட்டவே பாடுபடுகின்றோம்.

தவறான தீர்மானங்கள் மூலமே நெருக்கடிகள் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த இரண்டு வருடங்களோடு ஒப்பிடுகையில் அதன் பின்னரான முன்னேற்றம் மற்றும் நாம் எங்கே உள்ளோம் என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியம் என்றார்.

## நாமல் இராஜினாமா

பாராளுமன்றத்துக்கு செவ்வாய்க்கிழமை (06) அறிவித்தார்.

பாராளுமன்றம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், செவ்வாய்க்கிழமை (06) காலை 9.30க்கு கூடியது. சபாநாயகர் அறிவிப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷ விலகியுள்ளதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த 2ஆம் திகதி கூடியதாகவும், இதன்போது பிரேமநாத் சி தொலவத்த உறுப்பினராக நியமிக்கப்பட்டதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நாமல் ராஜபக்ஷ பதவி வகித்த நிலையில் அவர் விலகியுள்ளதால் அந்தக் குழுவுக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

## மின்சாரம், எரிபொருள் அத்தியாவசிய சேவை

இந்த வர்த்தமானிக்கு அமைவாக எந்தவொரு அரச கூட்டுத்தாபனம், அரச திணைக்களம், உள்ளூராட்சி மன்றம், கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளை மூலம் வழங்கப்படும் சேவைகள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்விற்கான அத்தியாவசிய சேவைகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிலர் தவறிழைத்தமை அம்பலமானது

இந்த சம்பவம் தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழுவின் விசாரணை அறிக்கையில் மேற்படி விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான பட்டதாரியான மரியராஜ் சிந்துஜா என்ற தாய், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் ஜூலை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்த போக்கே குறித்த பெண்ணின் மரணத்துக்குக் காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த மரணம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சினால் சுயாதீன விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து துரித விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளது.விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழுவொன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளன.

மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## "வாடகைக்கு விட முடியாது"

பதில் - ஜனாதிபதி எம்மை ஒதுக்கவோ அல்லது பிரிக்கவோ ஒருபோதும் முயற்சிக்கவில்லை என்பதை நான் மிகுந்த பொறுப்புடன் கூறுகின்றேன். நாட்டு மக்களின் அபிப்பிராயத்தின்படி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்குமாறு அவர்கள் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்தார்கள். கட்சியாக இணைந்து பணியாற்றுமாறு அவர் எப்போதும் கூறுவார். நடனம் ஆட முடியாதவர்களைப் பூமி இழுக்கும் என்பது போல் சாக்குப்போக்கு சொல்பவர்களின் கருத்தே ஒழிய இது எங்களின் கருத்து அல்ல.

கேள்வி - கட்சிக்கு ஏன் ஒரே கருத்துக்கு வர முடியவில்லை?

பதில் - இந்த மொட்டுக் கட்சி மக்களின் வியர்வையால் கட்டியெழுப்பப்பட்ட கட்சி. இது பணக்காரர்களுக்கு வாடகைக்கு, குத்தகைக்கு அல்லது விற்பதற்கு ஏற்ற கட்சி அல்ல. 2022 இல் ஜனாதிபதி நல்லவராக இருந்தால், அவர் தனது பொறுப்பை நிறைவேற்றியிருந்தால், அவர் ஏன் இன்று மோசமாக இருக்கிறார்?

கேள்வி- இந்த கலந்துரையாடலில் என்ன பேசப்பட்டது?

பதில் - ஜனாதிபதியின் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடினோம். மேலும், இதுவரை முடிவெடுக்காதவர்கள் இன்று எம்முடன் பேசினர்.

## "விசேட வட்டியை இன்னும் வழங்கவில்லை"

ஓய்வூதியர்கள், முதியோர்களுக்கான 15 சதவீத விசேட வட்டி வீதத்தைப் பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் பல தடவைகள் தெரிவித்திருந்தபோதும் இதுவரை அதனை வழங்கத் தவறிவிட்டதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

ஓய்வூதியர்கள் முதியோர்களுக்கு வழங்கப்பட்டுவந்த 15 சதவீத விசேட வட்டி வீதத்தைக் குறைத்து அதனை 7.15 சதவீதம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. 2016இல் இருந்து 2020வரை இதனைச் செயற்படுத்துவதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது. இருந்தபோதும் இந்த வட்டி வீதத்தை மீண்டும் 15சத வீதமாக அதிகரித்துக்கொடுக்க அரசாங்கம் தவறி இருக்கிறது.

முதியோர்கள் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வங்கிகளில் சேமிக்கும் பணத்துக்குக் கிடைக்கப்பெறும் வட்டியைக் கொண்டே தங்களின் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர். அவர்களின் இந்த 15சத வீத வட்டி வீதத்தை வழங்குவதாக அரசாங்கம் இந்த சபையில் பல தடவைகள் உறுதியளித்தது . ஆனால் செயற்படுத்துவதில்லை. அமைச்சர் ஒருவர் இந்த சபையில் பொறுப்புடன் ஒரு விடயத்தைத் தெரிவித்தால், அதனைச் செயற்படுத்த வேண்டும்.


அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் முதலாவதாக எடுத்த தீர்மானம், ஒரு இலட்சத்து 21ஆயிரம் ஓய்வூதியர்களின் வட்டி வீதத்தை 2016இல் இருந்து 2020வரை குறைப்பதாகும். இந்த ஓய்வூதியர்களில் சிலர் தற்போது உயிருடன் இல்லை.

அதேபோன்று கிராம சேவகர்களின் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்த சபையில் தொடர்ந்து தெரிவித்து வந்தேன். கிராம சேவை அதிகாரிகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த சேவை பிரமாணக் குறிப்புக்குப் பதிலாக அமைச்சருக்கு, அதிகாரிகளுக்குத் தேவையான சேவை பிரமாணக் குறிப்பையே அனுமதித்துக்கொள்ள அனுப்பப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் இந்த சபையில் அனைத்துக்கும் இணக்கம் தெரிவிக்கின்றனர். ஆனால், அவற்றைச் செயற்படுத்துவதில்லை என்றார்.



# இன்று ஆடிப்பூரம்



வி.ரி.சகாதேவராஜா

ஆடிப்பூரம் இன்று புதன்கிழமை (07) கொண்டாடப்படுகின்றது. ஆடிப்பூரமானது அம்பாளுக்கும் ஆண்டாளுக்கும் உரிய நாளாகும், அன்றைய நாளில் அம்பாள் பெண்மை அடைந்ததாகவும், உமா மகேஸ்வரியாக ஆண்டாளாக அவதரித்தார் என்றும் கூறப்படுகின்றது. இதனால்தான் ஆடிப்பூர நாளன்று எல்லாம் அம்மன் ஆலயங்களிலும் சடங்குகள், சம்பிரதாயங்கள், விஷேட பூசைகள் நடக்கின்றன.

இந்த நாளில் அம்மனுக்கு மஞ்சள் காப்பு, சந்தனக் காப்பு, குங்கும காப்பு, வளைகாப்பு, வளையல் அலங்காரம் ஆகியவை பக்தர்களால் நடத்தப்படுகிறது.

இந்த ஆடிப்பூர தினத்தை வளைகாப்பு நாளாகக் கருதி, அம்பாளுக்கு அலங்காரம் செய்து அபிஷேகம் பண்ணிப் பெரு விழாவாகக் கொண்டாடுகிறார்கள், அதற்குக் காரணம் மூன்றாம் மாதத்தில் (பங்குனி உத்தரம்) அநேகமான பெண் தெய்வங்களுக்குத் திருமணம் நடந்துள்ளது.

அதன்படி, திருமணமாகிக் கருவுற்று ஐந்தாவது, ஏழாவது, ஒன்பதாவது மாதத்தில் வளைகாப்பு நடத்துவது வழமை. இதன் அடிப்படையில், ஆடி மாதம் அம்பாளுக்குரிய ஐந்தாவது மாதம் என்பதால் வளைகாப்பு மாதமாக எல்லா அம்மன் ஆலயங்களிலும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

## இந்திய மீனவர் பிரச்சினைக்கு

# “நிரந்தர தீர்வு வேண்டும்”

## அண்ணாமலை தலைமையில் மனு கையளிப்பு

இந்தியா, இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பை ஏற்படுத்தி மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் அண்ணாமலை தலைமையிலான மீனவர்கள் கோரிக்கை மனு வழங்கினர்.

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் தமிழக மீனவர் பிரதிநிதிகள் திங்கட்கிழமை(07) டெல்லி சென்றனர். டெல்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பான மனுவை வழங்கினர். அப்போது, சர்வதேச ஆழ்கடல் பகுதியில் இலங்கை கடற்படை படகு மோதி உயிரிழந்த மீனவர் மற்றும் காணாமல் போன மற்றொரு மீனவர் குறித்தும், ராமநாதபுரத்தில் மீனவர்கள் போராட்டம் குறித்தும்




பேசப்பட்டது. காணாமல் போன மீனவரை விரைந்து கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்றும் அப்போது மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் அனைவரையும் விரைவாக மீட்டுத் தர வேண்டும். இந்திய,இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பை இந்திய அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். பணியில் இருக்கும்போது மரணம் ஏற்பட்டால் மீனவர்களுக்கு இழப்பீடு கிடைக்கும் வகையில், விபத்துக்கள் அல்லாத ஆயுள் பாதுகாப்பு திட்டம் வேண்டும். மீனவர்களுக்கு டீசலுக்காக வழங்கப்படும் மானியம் அதிகரிக்கப்பட வேண்டும்.

25 ஆண்டுகளாக மீனவர்கள் சேகரிக்கத் தடை செய்யப்பட்ட கடல் வெள்ளரிக்கான தடையை நீக்க வேண்டும். ஃபைபர் படகுகளுக்குக் கூடுதலாக மானியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்த சந்திப்பின்போதே இலங்கையின் தூதரை வரவழைத்து தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் இனி நடைபெறக் கூடாது என கடுமையான கண்டனத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார் என்றும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நிர்வாண புகைப்படங்கள் வெளியானது எப்படி?



அதுருகிரிய பச்சை குத்தும் மையத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கிளப் வசந்த என்ற வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேராவின் சடலத்தின் நிர்வாண புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானமை தொடர்பாக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சுமார் 30 பேரிடம் சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலத்தின் பிரேதப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டபோது, மருத்துவ மாணவர்களும் இணைந்திருந்தனர். அவர்களின் ஊடாக குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கொலைச் சம்பவம் தொடர்பான காணொளி காட்சிகளை வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் இருந்தும் குறிப்புகள் மற்றும் உண்மைகளை எடுத்துக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் கையளிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் காலம் திங்கட்கிழமை (05) நள்ளிரவுடன் நிறைவடைவிருந்த போதிலும், அந்த கால எல்லை தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 50,000க்கு மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கடமைகளுக்கு அவசியமான பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்து மதிப்பிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்க ப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# வரி செலுத்தாதவர்களுக்கு பகிரங்க அறிவித்தல்

ஆ.ரமேஸ்




நுவரெலியா மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரிப் பணத்தைச் செலுத்தாதவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப் போவதாக நுவரெலியா மாநகர சபை பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளது.

நுவரெலியா மாநகரசபை ஆணையாளரின் உத்தரவின் பேரில் இந்த விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விசேட அறிவித்தலில் நுவரெலியா மாநகர சபைக்கு வரிப் பணம் செலுத்தத் தவறியவர்களின் சொத்துக்களை (15.08.2024) முதல் (15.10.2024) வரையான காலப்பகுதிக்குள் பறிமுதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த (30.06.2024) வரையான காலப்பகுதிக்குள் அரசாங்க சொத்துக்களிலிருந்தும், தனியார் சொத்துக்களிலிருந்தும் நுவரெலியா மாநகர சபைக்கு 15,614,400.21 ரூபாய் வரிப் பணம் வந்து சேர வேண்டும் என மாநகர சபை கணக்காளர் பிரிவுக்குப் பொறுப்பான பிரதான கணக்காளர் தெரிவித்தார்.

அதேநேரம் மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தினை வரி செலுத்தக் கூடியவர்கள் உரிய முறையில் செலுத்தத் தவறிய பட்சத்தில் மாநகர சபையின் ஆணையாளரின் அதிகாரத்திற்கு அமைய பொது மக்கள் பார்வைக்காக இந்த விஷேட அறிவித்தல் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மாநகர சபைக்கு வரி செலுத்தத் தவறியவர்கள் எதிர்வரும் (15.08.2024)க்கு முன்பாக வரிப் பணத்தைச் செலுத்தி தங்களது சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாகவும் மாநகர சபை கணக்காளர் பிரிவு தெரிவித்துள்ளது.

# வாசு ஓய்வு



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார அரசியலிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார்.

இப்போதும் கட்சியின் தலைமைப் பதவியை விட்டு விலகி கட்சியின் தலைமைப் பொறுப்பை நிரோஷன் பிரேமரத்னவுக்கு வழங்கியுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அவர் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார். உடல்நலக்குறைவு காரணமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.

# அச்சிடும் செலவு அதிகரிக்கக்கூடும்

கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும்போது இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் அச்சிடும் செலவுகள் மும்மடங்கினால் அதிகரிக்கக்கூடும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் அச்சிடப்படவேண்டிய வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளமை ஆகியன இதற்கான காரணமாகும் என அரச அச்சகர் கங்கா கல்பனீ லியனகே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது, வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதுடன் தொடர்புடைய ஏனைய செலவுகளும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார். அதற்கமைய, இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் அச்சிடும் நடவடிக்கைகளுக்காக 800 மில்லியன் ரூபா செலவாகுமென எதிர்பார்க்கப்படுவதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டு 27 அங்குலம் நீளம் கொண்டதாகக் காணப்பட்டது.

இம்முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், வாக்குச் சீட்டின் நீளமும் அதிகரிப்பதுடன், செலவுகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்துமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# “சர்வதேசத்திடம் நீதி கோருகிறோம்”

ஏ.எச்.ஹஸ்பர்



சர்வதேசத்திடம் நீதியை எதிர்பார்க்கிறோம் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க அம்பாறை மாவட்ட தலைவி த.செல்வராணி தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 30 சர்வதேச காணாமல் போனோர் தினமாகும். இதனை முன்னிட்டு திருகோணமலையில் செவ்வாய்க்கிழமை (06) ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்முறை சர்வதேச காணாமல்போன தினத்தினை திருகோணமலை நகரில் போராட்டமாக முன்னெடுக்கவுள்ளோம், இதற்காக அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ச்சியாக எங்கள் போராட்டத்துக்கு இலங்கை அரசாங்கம் நீதியைப் பெற்றுத்தரவில்லை, இதனால் 14 வருடமாக போராட்டத்தில் ஈடுபட்டு எமது உறவுகளுக்காகப் பாடுபடுகிறோம்.

இறுதி யுத்தத்தின்போது, சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் இதில் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். வடக்கு கிழக்கு 8 மாவட்டங்களில் போராட்டங்களை நடத்தி வருகிறோம் எமக்கான நீதியைச் சர்வதேசம் தான் பெற்றுத்தர வேண்டும் என்றார்.


## விவேகானந்தரின்

# திருவுருவச்சிலை திறந்து வைப்பு


கொழும்பு-விவேகானந்தா கல்லூரியில் உள்ள சுவாமி விவேகானந்தரின் திருவுருவச்சிலை மீளப் புனரமைக்கப்பட்டு, இராமகிருஷ்ண மிஷினின் இலங்கைக்கான பீடாதிபதி அக்ஷராத்மானந்த சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த சுவாமி விவேகானந்தரின் சிலை, 1992.03.24ஆம் திகதி அமரர் இ.அருட்பிரகாசத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அவரது புதல்வரும்

பழைய மாணவருமான அ.இளங்கோவினால் (1997 சாதாரண தரம்/2000 உயர்தரம்) தற்போது மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் மூ.மூவேந்தன், பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவர் மீனாட்சி சுந்தரம்,அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.







# புள்ளடியிட்டால் மட்டும் போதாது; நாமும் அர்ப்பணிக்க வேண்டும்

வாக்களிப்பது குடிமக்களின் முழு உரிமை. அந்த உரிமையை மிகவும் பொறுப்புடன் பயன்படுத்துவது ஒரு நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார நல்வாழ்வுக்கு மிகவும் முக்கியமானது. அந்த வகையில், நாட்டின் 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஏற்கப்படும். அதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. கட்டுப் பணம் செலுத்தல் அதிகரித்துள்ளது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் எத்தனை பேர் போட்டி இடுவார்கள் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. எனினும், கடந்த முறையை விடவும் கூடுதலானவர்கள் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில், பிரதான வேட்பாளர்களுக்கு இடையில் கடுமையான போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான அறிவிப்பு, புதன் (07) அல்லது வியாழன் (08) அன்று அறிவிக்கப்பட இருக்கிறது.

ஜனநாயக நாடுகளில் தேர்தல் நடத்தப்படுகிறது. ஜனநாயகம் பிரதிநிதித்துவம் என்பது குடி மக்களின் நலனுக்காகச் செயல்படுவதற்காகக் குடிமக்களால் அவ்வப்போது பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தங்கள் பிரதிநிதிகளைக் குடிமக்கள் தேர்தல்களின் ஊடாக தேர்ந்தெடுக்கின்றனர்.

இலங்கையை எடுத்துக்கொண்டால் முக்கியமாக நான்கு தேர்தல்களில் கவனம் செலுத்தப்படுகிறது. அதுவே ஜனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல்கள் ஆகும். எனினும், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்துவிட்டன. அதற்கு எதிராகக் குரல்கள் இன்னும் எழுப்பப்படுகின்றன.

ஒரு நல்ல குடிமகன் தன் பொறுப்பை மட்டும் நிறைவேற்றி அமைதியாக இருப்பவன் அல்ல. அதாவது, கடமையை அல்லது தொழில் வாழ்க்கையைச் செய்து வரி செலுத்தி சட்டப்படி வாழ்வது மட்டுமல்ல. அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும். போராட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும். பொது நலனுக்காகச் செயல்படுபவராக இருக்க வேண்டும். வாக்களிக்கும் எத்தனை பேர், அவ்வாறு போராடுகின்றனர் என்பது கேள்வியாகும்.

அதேபோல், அரசாங்கத்தைச் சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்கான, போராட்டங்கள் நடத்தப்படுகின்றனவா? அல்லது, தாங்களும் இருக்கிறோம் என்பதை அவ்வப்போது காண்பிப்பதற்குப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றனவா என்பதை எல்லாம் வாக்காளர்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர்.

பல இலட்ச மக்களின் மனங்களை வென்று, ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று ஆட்சி பீடத்தில் இருக்கின்றோம் என மமதையுடன் செயற்படவும் கூடாது. ஆட்சி பீடத்தில் ஏற்றியவர்களை, கீழே இறக்குவது வாக்காளர்களுக்குப் பெரிய வேலை இல்லை என்பது கடந்தகால கசப்பான அனுபவங்களாகும்.

குடிமக்களாகிய நாம் மாற்றத்தைச் செய்ய வேண்டும். இல்லையேல் செய்யாவிட்டால், எத்தனை தேர்தல்கள் நடத்தினாலும், எத்தனை பிரதிநிதிகளை நியமித்தாலும், அமைப்பில் எத்தனை மாற்றங்கள் செய்தாலும், நாம் விரும்பும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அனைத்து குடிமக்களின் பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் நாட்டை நிலையானதாகக் கட்டியெழுப்ப நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மார்பில் பாயும் வளர்த்த கடா



எம்.எஸ்.எம்.ஐயூப்

ஜனாதிபதித் தேர்தலொன்று சுமார் ஆறு வாரங்களில், அதாவது செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற இருக்கும் நிலையில், அரசியல்வாதிகள் இந்நாட்களில் தவளைகளைப் போல் அந்தக் கட்சியிலிருந்து இந்தக் கட்சிக்கும் இந்தக் கட்சியிலிருந்து அந்தக் கட்சிக்கும் தாவுவதைப் பார்க்கிறோம். எவர் எந்தக் கட்சியிலிருந்து எந்தக் கட்சிக்கு எந்த நேரத்தில் தாவுவார் என்று எதிர்வு கூற முடியாத நிலையே நாட்டில் இருக்கிறது. கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கொள்கை இல்லையென இந்த விடயத்தில் எதிர்வு கூறலாம்.

ஏனெனில், ஒரு கொள்கையை கடைபிடிக்கும் ஒருவர் அதற்கு எதிரான அல்லது மாற்றுக் கொள்கையை கடைபிடிக்கும் ஒரு கட்சிக்குத் தாவ மாட்டார். ஆனால், எவருக்கும் எந்தக் கட்சிக்குக் கொள்கை என்று எதுவும் இல்லாத நிலையில், எவரும் எந்தக் கட்சிக்கும் எந்நேரத்திலும் தாவலாம். அது தான் இப்போது நடைபெறுகிறது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தாம் மிக மோசமாக விமர்சித்த ஓர் அரசியல் கட்சியை அல்லது ஓர் அரசியல் தலைவரை ஒருவர் இப்போது கட்டித் தழுவிப் போற்றிப் புகழ்வதாக இருந்தால் வெட்கம் என்பது எது என்று அறியாத ஒருவராகத் தான் அவர் இருக்க வேண்டும். ஆனால், திருடர்கள் என்று பெயர் பெற்ற அரசியல்வாதிகளை விடுங்கள், படித்தவர்கள் என்று கூறப்படும் அரசியல்வாதிகளும் அவ்வாறு செய்கிறார்கள். 2022ஆம் ஆண்டுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்தவர்களும் அக்கட்சியின் பெரும்பான்மையினரால் 2016ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைச் சேர்ந்தவர்களும் ஐக்கிய தேசிய கட்சியினரைத் தேசத் துரோகிகளாகவே வர்ணித்தனர். அதேபோல் அவர்களை ஐ.தே.கவினரும் திருடர்கள் என்றனர். ஆயினும், 2022ஆம் ஆண்டு பொதுஜன முன்னணியின் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி நடத்தவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்கிய பொது ஜன முன்னணியினர் நாட்டை பொருளாதார அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியவர் விக்ரமசிங்க மட்டுமே என்று புகழத் தொடங்கினர். இதனையடுத்து, அரசியல் ரீதியாக படிப்படியாகத் தலையைத் தூக்கிய ரணில் விக்ரமசிங்க, இப்போது பொதுஜன முன்னணியை ஏறத்தாழ முழுமையாகவே விழுங்கி விட்டார் என்றே தெரிகிறது. அவர் 2022ஆம் ஆண்டு அரகலய என்றழைக்கப்படும் ஆர்ப்பாட்டம் காரர்களுக்குச் செய்ததையே பொதுஜன முன்னணிக்கும் செய்தார். 2022ஆம் ஆண்டு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடிக்கவே ஐ.தே.க அதை ஆதரித்தது. 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்‌ஷ பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட போது ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆர்ப்பாட்டங்களே அதற்கு வழிவகுத்தன. அந்த குழப்ப நிலையில் பொதுஜன முன்னணி. எம்.பிக்களின் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதன் பின்னரும் அவர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். ஆனால், 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு நாட்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுச் செல்வதாக அறிவித்து இருந்த நிலையில், இராணுவத்தைக் கொண்டு அவர்களை அடித்து விரட்டினார். பொதுஜன முன்னணியின் ஆதரவிலேயே பாராளுமன்ற வாக்கெடுப்பொன்றின் மூலம் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதனை அடுத்து, ரணில் பாராளுமன்றத்தில் முன்வைத்த அத்தனை சட்டமூலங்களையும் பிரேரணைகளையும் நிறைவேற்றப் பொதுஜன முன்னணியினர் எம்.பிக்களே வாக்களித்தனர். அவ்வாறு பொதுஜன முன்னணியால் வளர்க்கப்பட்ட இந்தக் கடா இப்போது அம்முன்னணியின் மார்பிலேயே பாய்கிறது. இந்த நிலையில், கட்சித் தாவும் அரசியல்வாதிகள் தாம் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டே அவ்வாறு செய்வதாகக் கூறுகின்றனர். இது அப்பட்டமான பொய்யாகும். அவர்களில் எவரும் நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் தமது இருப்பை கருதியே அவ்வாறு செய்கிறார்கள்.

ரணில் விக்ரமசிங்கவே நாட்டை பொருளாதார அழிவிலிருந்து காப்பாற்றினார் என்றும் அவருக்கு மட்டுமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் உருவாகும் என்றும் அவர்களில் சிலர் கூறுகின்றனர். நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு பொருளியல் அறிவு இல்லாதமையினாலேயே இவர்கள் இவ்வாறு கூறி மக்களை ஏமாற்றப் போகிறார்கள்.

ரணில் பதவிக்கு வந்ததன் பின்னர் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமான வரிசைகள் இல்லாமல் போனமை உண்மை தான். ஆனால், அது ரணிலின் திறமையா? உண்மையிலேயே என்ன நடந்தது?

2022 மார்ச் மாதமளவில் இலங்கைக்கு எந்தவொரு நாடும் கடன் வழங்கத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில், இலங்கைக்கு ஏற்கெனவே பெற்ற கடனையாவது திருப்பிச் செலுத்த முடியாத நிலை உருவாகியிருந்தது. எனவே, தான் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு வாரக் கணக்கிலும் மைல் கணக்கிலும் நீண்ட வரிசைகளை-காணக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ உதவி கேட்டு சர்வதேச நாணய நிதியத்தை அணுகினார். அந்நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தகுதியான அதிகாரிகளையும் நியமித்தார். அவர்களின் ஆலோசனைப் படி, இப்பேச்சு வார்த்தைகளின் போது இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க கிளிபெர்ட் சான்ஸ் (Clifford Chance) மற்றும் லஸார்ட் (Lazard) என்ற இரண்டு சர்வதேச நிறுவனங்களையும் நியமித்தார்.

இவ்வாறு தான் கடன் பொறியில் சிக்கிக் கொண்ட ஏனைய நாடுகளும் நடந்துகொண்டன. ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சுமார் 40 நாட்களில், அதாவது 2022 செப்டம்பர் மாதம் முதலாம் திகதி கோட்டா நியமித்த அதிகாரிகளும் நாணய நிதியத்தின் அதிகாரிகளும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டனர்.

தாம் 2021ஆம் ஆண்டு இலங்கை விடயத்தில் தயாரித்த அறிக்கையில் (country report) இருந்த பரிந்துரைகளையே நாணய நிதியம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளியிட்டது. பேச்சுவார்த்தை என்று கூறினாலும் உண்மையிலேயே அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர இலங்கை அதிகாரிகளால் எதையும் செய்ய முடியவில்லை. ஜனாதிபதியாக ரணிலாலும் எதையும் செய்ய முடியவில்லை.

கடந்த வருடம் மார்ச் மாதம் நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையால் ஒப்புதல் வழங்கப்பட்ட அந்த பரிந்துரைகளின் பிரகாரம் வரிகளை அதிகரித்து கடன் வழங்கிய நாடுகளிடம் மன்றாடி கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலத்தைச் சற்று (4 ஆண்டுகள்) பிற்போட்டுக்கொள்ள முடிந்துள்ளது.

நாடு 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று அதாவது வங்குரோத்து நிலையை அறிவித்தும் உள்ளது. அரசாங்கம் இறக்குமதிகளுக்குத் தடை விதித்தது.

நாணய நிதியத்தின் தலையீட்டை அடுத்து, அது வரை இலங்கைக்குக் கடன் வழங்குவதில் பின்வாங்கிய உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கைக்கு சிறிதளவு கடன் வழங்கவும் முன்வந்துள்ளன. இவ்வாறு திரட்டிக்கொண்ட-பணத்தின் மூலம் எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்ய முடிந்துள்ளது. இதனால் போக்குவரத்து மற்றும் மின்சார உற்பத்தி போன்ற அடிப்படை சேவைகள் தற்காலிகமாக முந்தைய நிலைக்கு வந்தன.

அவ்வாறில்லாது நாட்டில் ஒரு அங்குலமாவது புதிதாகப் பயிரிடப்படவில்லை. ஒரு ஊசியாவது புதிதாக உற்பத்தி செய்யப்படவில்லை. உல்லாசப் பிரயாணத் துறையின் மூலமும் ஏற்றுமதியின் மூலமும் பெறும் வெளிநாட்டுச் செலாவணியின் அளவு முந்தைய நிலையை இன்னமும் அடையவில்லை.

மாறாகப் பல்லாயிரக் கணக்கான சிறு கைத்தொழில்கள் பொருளாதார நெருக்கடியால் இன்னமும் மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனவே, நாணய நிதியம் தான் நாட்டுக்கு மூச்செடுக்க ஒரு அவகாசத்தை (Breathing space) ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. எனினும், அதனாலும் கடன் பழு அதிகரித்துள்ளது.

இந்தச் சலுகை காலத்தைத் தான் நாம் இப்போது கழித்துக் கொண்டு இருக்கிறோம். இதைக் காட்டித் தான் நான் நாட்டை மீட்டெடுத்தேன் என்று ரணிலும் ரணில் நாட்டை மீட்டு எடுத்தார் என்று அவரை சூழ்ந்து கொண்டு இருப்போரும் கூறுகின்றனர்.


ஆனால் 2022 ஆம் ஆண்டு மும்மடங்காக ஏறிய விலைவாசி மிகச் சிறிதளவே குறைந்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட மக்களின் வருமான வீழ்ச்சி இன்னமும் சீராகவில்லை. வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் இல்லை.

எனினும், 2027இல் முதல் நாம் ஏற்கெனவே செலுத்தாதிருந்த கடன்களையும் அவற்றின் வட்டியையும் நாணய நிதியத்தின் உதவியால் பெற்ற புதிய கடன்களையும் வட்டியையும் செலுத்தித் தான் ஆக வேண்டும்.

அதற்கான வழியைத் தேடாவிட்டால் ஓரிரு வருடங்களில் மற்றொரு பஞ்ச காலத்தையும் வரிசை காலத்தையும் நிச்சயமாக சந்தித்தேயாகவேண்டும்.

இதற்கு ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்திடம் தீர்வு இல்லாதது போலவே சஜித் பிரேமதாசவிடமும் தீர்வில்லை. அனுர குமார திஸாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நாட்டின் பொருளாதார விடயங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து உள்ளதாகத் தெரிகிறது.

ஆயினும், அவர்களும் இன்னமும் இந்தப் பிரச்சினையைப் பற்றித் தெளிவானதொரு திட்டத்தை முன்வைக்கவில்லை. ஏனைய வேட்பாளர்கள் வெற்றி பெறப் போவதில்லை என்பதால் அவர்கள் பற்றிய சிந்திப்பதில் அர்த்தம் இல்லை. எனவே, குறைந்தபட்சம் ஊழல் குறைந்த ஆட்சியையாவது காணத் தான் இம்முறை மக்கள் முயல வேண்டியுள்ளது. இதுவரை ஊழலில் ஈடுபடாத, அதேபோல் ஊழலில் ஈடுபட மாட்டார்கள் என்ற நியாயமான நம்பிக்கை உள்ளவர்களிடம் தான் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறந்தள்ளினால், எதிர்காலத்தில் ஏற்ற நிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களைக் காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.


ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாசம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

- பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நெற்செய்கையில் நோய்த் தாக்கம் அதிகரிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் நோய்த் தாக்கம் அதிகரித்தமையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 22ஆயிரத்து 781.25 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் குடமுருட்டி குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 330 ஏக்கர் நெற்செய்கை முழுமையான அறுவடை இம்மாத இறுதிக்குள் இடம்பெறவுள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் பல் வேறுபட்ட நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. நெல் வயல்களில் தத்தி, மடிச்சுக்கட்டி, இலை சுருட்டி போன்ற நோய்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றன.

கடந்த கால போகத்திலும் இவ்வாறான நோய்த் தாக்கம் காரணமாக பெரும் அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் இம்முறை சிறுபோகத்திலாவது ஓரளவு விளைச்சல் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தனர்.

எனினும், நோய்த் தாக்கம் அதிகரித்து வருகின்றமையால் விளைச்சல் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



## பெண்கள் உலகிற்கு ஒளியாய் திகழ

# “பெண்கல்வியை வளர்ப்போம்”

முஹமட் ஹலீல் இஸ்ஸத் பானு
(நான்காம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி),
கல்வி பிள்ளை நலத் துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்.

ஒரு பெண் சமூகத்தில் தன் பெற்றோருக்கு நல்ல மகளாகவும், உடன் பிறந்தவர்களுக்கு சகோதரியாகவும், கணவனுக்கு மனைவியாகவும், குழந்தைக்கு நல்ல தாயாகவும், விளங்குகிறாள். ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற பாரதியின் பாடலுக்கு ஏற்ப இன்று ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் எல்லா துறைகளிலும் பெரிய பொறுப்புகளில் திறமையாகச் செயல்பட முடிகிறது. இதற்கு ஆதாரமாக இருப்பது பெண் கல்வியே ஆகும்.

நாடும் வீடும் வளம் பெற வேண்டும் எனில் பெண் கல்வி முக்கியமாகும். ‘பெண்கள் நாட்டின் கண்கள்’ என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட வாக்கு. நாட்டில் பெண்கள் கல்வியில் செழிப்பு பெற்றால் நாடு சிறந்தோங்கும்.

பெண் கல்வியின் அவசியத்தை நோக்குவோமாயின் ஆண் ஒருவர் கல்வி கற்றால் அது அவர் ஒருவருக்கு மட்டுமே அறிவு வளர்ச்சி அடையும். ஆனால், பெண் ஒருவர் கல்வி கற்றாளோ அக் குடும்பம் முழுவதும் கல்வி அறிவு பெறும். ஏனென்றால் தாயின் மடியிலேயே குழந்தை கற்க ஆரம்பிக்கிறது.

எனவே அனைத்து குழந்தைகளும் கல்வி அறிவு பெரும்பொழுது குடும்பம் முழுவதும் கல்வி அறிவை பெறுவது இயல்பு தானே! இதனால் குடும்பம் முன்னேறுவதற்கு குடும்பத்தின் ஆணிவேரான பெண்களுக்கு கல்வி அவசியம் என்பதை அறியலாம். இவ்வுலகில் பெண்கள் கௌரவமாகவும் கம்பீரமாகவும் வாழ வேண்டுமென்றால் கல்வி அறிவு அவசியம்.

சமுதாயம் முன்னேற வேண்டுமானால் பெண் கல்வி இன்றி அமையாத ஒன்றாகும். “கல்வியில்லா பெண்கள் கலர் நிலம் அந்நிலத்தில் புற்கள் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் வளர்வதில்லை” என்ற பாரதிதாசன் கூற்றானது குடும்ப வளர்ச்சியில் பெண் கல்வியின் அவசியத்தை உணர்த்துகிறது.

முன்னைய காலங்களில் பெண் கல்வி புவியாலும் மன்னர்களுக்கு நல்லவற்றைப் புலவர்கள் எடுத்துக்கூறி அரசனை நேர் வழிப்படுத்தும் மக்களின் கஷ்டங்களையும் நீக்கி சந்தோஷமான வாழ்க்கையை மேற்கொள்ளப் புலவர்கள் அறிவைப் பகிர்ந்து உள்ளனர் அப்புலவர்களில் பெண் புலவர்களும் அடங்குவர்.

அதாவது ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சி போன்ற அரசருக்கு அறிவுரை பகிர்ந்து போரினால் ஏற்படும் இன்னல்களைக் கூறி போரினை தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கியதும் பெண் புலவரே அதுபோல கோவலன் தான் செய்த தவறை எண்ணி மனம் வருந்திய போதும், அவனை நேர் வழிப்படுத்தித் தைரியமூட்டியவரும் கவுந்தியடிகள் என்னும் பெண் புலவரே இவை பண்டைய காலத்தில் பெண்கள் பெற்றிருந்த கல்வியறிவை வெளிப்படுத்துகின்றது.

இவர்கள் மட்டும் இன்றி, இன்னும் ஏராளமான பெண் புலவர்கள் கல்வி அறிவில் சிறந்து விளங்கியுள்ளனர் பெண் கல்விக்கு எதிரான வாதமும் மறுப்பும் முந்தைய காலத்தில் மட்டுமன்றி இன்றைய காலத்திலும் விளங்குகின்றது.

அதாவது பெண்களின் கல்வி வளர்ச்சியையும் அவர்களின் கல்வியின் முக்கியத்துவத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்த சில வீணர்கள் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று தேவையில்லாது உளறி பெண்களைக் கல்வி கற்பதிலிருந்து தடுத்து வைத்ததோடு பெண் விருப்பங்கள் மறைக்கப்பட்டவர்களாகவும் வீட்டுப் பணிகளைச் செய்வது மட்டுமே பெண்களின் தொழில் என்று கூறி வீடுகளில் முடக்கி வைத்ததோடு கல்வியை விட்டும் தடுக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர்.

இவ்வாறு வீணான மூட கதைகளைத் தகர்த்தெறிந்து பெண்களைக் கல்வியின் பால் ஈடுபட வைப்பதற்குப் பலர் பாடுபட்டு வந்துள்ளனர். அவ்வாறு பெண்களின் கல்விக்குப் பாடுபட்டவர்களில் மகாகவி பாரதியாரும் குறிப்பிடத்தக்கவராவார் இவர் பெண் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு பல முயற்சிகளில் ஈடுபட்டு பெண் கல்வியைச் சிறப்பித்துப் பல பாடல்களைப் பாடி மக்களை உணர்ச்சி ததும்ப கிளர்ந்தெழ வைத்துள்ளார். “ஆணையும் பெண்ணையும் சரிநிகர் சமனாய் படைத்து அவர்களுக்கான உரிமையும் ஆக்கிக் கொடுத்தாள் பராசக்தி. ஆனால், பெண்கள் இடைக்காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டனர்.

இவற்றை நாம் ஒன்று சேர்ந்து தகர்த்து எறிவோம்” என பெண் விடுதலை என்னும் பாட்டில் பெண்களின் உரிமையைக் கூறி பெண் கல்விக்கு வித்திட்டுள்ளதைக் காணலாம்.

பெண்கள் கல்வி பெற்றதால் சமையலறையில் முடங்கிக் கிடந்த பெண் சமுதாயம் சாதனை பல புரிந்துள்ளனர். விளையாட்டுத் துறை முதல் விண்வெளி ஆராய்ச்சி துறை வரையில் பல துறைகளிலும் முத்திரை பதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது அரசியல் துறையில் இலங்கையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முதல் விண்வெளி துறையில் கல்பனா சாவ்லா வரையில் பங்காற்றியுள்ளனர். இதனால் தற்காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்துள்ளனர்.

இன்று உயர்கல்வி கற்போரிலும், ஆசிரியர் துறையிலும் ஆண்களை விட பெண்கள் அதிகரித்து வருகின்றனர் முன்பெல்லாம் ஆண்கள் மட்டுமே வருவாய் ஈட்டி வந்து கொண்டிருந்தனர் அப்பொழுது பெண் கல்வியினால் பெண்களும் ஆண்களுக்கு சமமாக வருவாய் ஈட்டி வருவதற்குப் பிரதான காரணமாக இருப்பது பெண் கல்வியாகும். இதன் மூலம் பெண் கல்வியின் அவசியத்தை அறியலாம்.

முற்காலத்தில் மட்டுமல்லாது, தற்காலத்திலும் சில இடங்களில் பெண்களுக்கான கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டுக் காணப்படுவதும் கவலைக்குரிய விடயமாகும். பெண்கள் தான் விரும்பிய துறையைத் தேர்ந்தெடுத்து கல்வி கற்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் எத்துறையைத் தெரிவு செய்து கல்வி கற்க வேண்டும் என்பதை குடும்பமும் சமூகமும் தீர்மானிக்கின்றதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அது மட்டுமல்லாது, ஒரு சில துறைகளில் பெண்கள் பின்தங்கி நிற்பதுவும் குடும்பம் சமூகம் அங்கீகரிக்கவில்லை என்பதனாலாகும். குறிப்பாக அரசியல் துறையில் பெண்கள் பின்தங்கி நிற்கின்றமைக்கு சமூகமும் குடும்பமும் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணராமயே காரணமாகும்.

இதனாலேயே இலங்கை அரசாங்கமும் பெண்கள் வறுமை காரணமாகக் கல்வியில் பின்தங்கி நிற்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு பல்வேறு நிதி உதவிகளை வழங்கி வருவதோடு, பெண்களின் நலன் கருதி பெண்களுக்குத் தனியான பாடசாலைகளையும் நடத்துவதோடு, பெண் கல்வியின் அவசியத்தை முன்னிறுத்திப் பல மன்றங்களில் மக்களுக்கு தெளிவூட்டியும் நடவடிக்கைகளை எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகத்தின் முன்னேற்றத்திற்கு குடும்ப முன்னேற்றத்திற்குப் பெண்கள் அறிவு பெற வேண்டும் என்பதும் வளர்ந்த நாடுகளும், வளர்கின்ற நாடுகளும் பெண்களுக்கான தேவைகள் சுதந்திரம் பாதுகாப்பு என பெண்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

எனவே, பெண்களின் அவசியத்தை உணர்ந்து பெண் கல்வியை வளர்ப்பதற்கும் உறுதுணையாக நிற்போம் பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்பதையும் உணர்ந்து அவர்களின் வளர்ச்சிக்கும் துணை நிற்போம். ஆகவே வீட்டில் விளக்கு ஏற்றும் பெண்கள் உலகிற்கு ஒளியாய் திகழ பெண் கல்வியை வளர்ப்போம்.

## ‘தளபதி 69’ படத்தில்

# 23 வயது நாயகி?



தளபதி விஜய் நடித்து முடித்துள்ள ‘கோட்’ திரைப்படம் செப்டம்பர் 5ஆம் திகதி வெளியாக இருக்கும் நிலையில் அவருடைய அடுத்த படமான ‘தளபதி 69’ படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

தளபதி விஜய் நடிப்பில், எச்.வினோத் இயக்கத்தில் உருவாக இருக்கும் ‘தளபதி 69’ படத்தின் ஆரம்பகட்ட பணிகள் கிட்டத்தட்ட முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் படத்தில் ‘பிரேமலு’ படத்தில் நடித்த மமிதா பாஜூ ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்க இருப்பதாக செய்தி வெளியாக இருக்கின்றது.

ஏற்கெனவே தமிழில் ஜிவி பிரகாஷ் நடித்த ‘ரிபெல்’ என்ற திரைப்படத்தில் மமிதா பாஜூ நடித்துள்ள நிலையில், விஜய்க்கு ஜோடியாக நடிக்கப் போகிறாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

23 வயது மமிதா பாஜூ, ‘தளபதி 69’ படத்தில் நடிக்க இருப்பது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டு வருகிறது.

# பிக்பாஸ் 8 கமல்ஹாசன்?



2017 இல் ‘பிக் பஸ்’ நிகழ்ச்சியின் தொகுப்பாளராக கமல்ஹாசன் வந்ததும் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதற்காக ஒரு திரைப்படத்திற்கு வாங்கும் சம்பளத்துக்கு குறைவில்லாமல் கமல் வாங்கினார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த 7 சீசன்களாக அந்த நிகழ்ச்சியை கமல் தொகுத்து வழங்கிய நிலையில், அடுத்து 8ஆவது சீசன் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது.

அதற்கான முன்னேற்பாடுகள் தற்போது ஆரம்பமாகி உள்ள நிலையில், இந்த வருடமும் கமல்ஹாசன்தான் தொகுத்து வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அதில் மாற்றம் வரலாம் என்றும் சொல்கிறார்கள்.

‘கல்கி 2898 ஏடி’ படத்தின் இரண்டாம் பாகத்தில் கமல்ஹாசன் படம் முழுவதும் வரப் போகிறாராம். அதற்கான படப்பிடிப்புகளிலும் அவர் கலந்து கொள்ள வேண்டும்.

எனவே, தன்னால் 8ஆவது சீசனை தொகுத்து வழங்க முடியாது என ரி.வி. நிர்வாகத்திடமும், ஷோ தயாரிப்பாளர்களிடமும் சொல்லிவிட்டார் என தகவல் கசிந்துள்ளது.

இருப்பினும் கமல்ஹாசனை எப்படியாவது சம்மதிக்க வைக்க வேண்டும் என கடுமையாக முயற்சித்து வருகிறார்களாம்.

# அந்த ஆசை இல்லை



ஆடுகளம் படம் மூலம் அறிமுகமாகி பிரபலமான நடிகை டாப்ஸி, ஆரம்பம், வந்தான் வென்றான், காஞ்சனா 2 உள்ளிட்ட படங்களில் நடித்தார்.

தற்போது அதிகமாக இந்தியில் நடித்து வரும் அவர், அக்ஷய் குமார் உடன் ‘கேல் கேல் மெயின்’ என்ற படத்தில் நடித்துள்ளார். ஓகஸ்ட் 15ஆம் திகதி திரைப்படம் வெளியாகிறது.

இப்படம் தொடர்பாக அவர் அளித்த பேட்டியில், தான் வேறு யாரையும் போல வாழ விரும்பவில்லை என்றும் தன்னை போலவே வாழ விரும்புவதாக கூறியுள்ளார்.

அத்துடன், பொலிவூட் சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக மாற வேண்டும் என்றெல்லாம் ஒரு போதும் ஆசைப்பட்டது இல்லை, தனது வாழ்க்கையில் தான் முதலிடத்தில் உள்ளதாகவும், காரணம் தான் உழைத்து சம்பாதிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

# வெப் தொடரில் விஜய் சேதுபதி



நடிகர் விஜய் சேதுபதி அண்மையில் வெளிவந்த ‘மகாராஜா’ படம் மூலம் மீண்டும் வெற்றி பாதைக்கு திரும்பியுள்ளார்.

மேலும் அவர் தனது புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருவதுடன், தற்போது புதிய வெப் தொடரில் நடிக்கவுள்ளார்.

‘டிஸ்னி ஹாட் ஸ்டார்’ ஓ.டி.டி. நிறுவனம் தயாரிக்கும் இந்த வெப் தொடரில் விஜய் சேதுபதியுடன் ‘குட் நைட்’ புகழ் மணிகண்டனும் இணைந்து நடிக்கிறார்.

இதற்கு ‘முத்து என்கிற காட்டான்’ எனும் தலைப்பு வைத்துள்ளனர். இது கிராமத்து பின்னனியில் உருவாகும் ஆக்ஷன் கதை தொடராக உருவாகவுள்ளது.



ஈராக்

அமெரிக்க படைத்தளத் தாக்குதலில்

# பலர் காயம்

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத்தளம் மீது செவ்வாய்க்கிழமை(06) ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதில் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன நகரங்களின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் பலர் உயிரிழந்தும் படுகாயமடைந்துள்ளனர்.

இதனிடையே, ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரானில் தலைநகர் தெஹ்ரானில் கடந்த 31ஆம் திகதி கொல்லப்பட்ட சம்பவம் மத்திய கிழக்கு மற்றும் இஸ்ரேலுக்கிடையில் போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க உதவியுடன் இஸ்ரேல் இந்தக் கொலையை அரங்கேற்றியுள்ளதாக ஈரான் குற்றம் சுமத்தியுள்ளதுடன், இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது.

இதற்கிடையில் லெபனானில் செய்யப்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலிய தளங்களின் மீது ஏவுகணைத் தாக்குதலை முன்னெடுத்து வருகிறது. மேலும், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத்தளம் மீது செவ்வாய்க்கிழமை(06) ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈராக்கின் அல்-அன்பர் மாகாணத்தில் உள்ள அயின் அல் அசாத் விமானப்படைத்தளத்தில் அமெரிக்கப் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ள படைத்தளத்தைக் குறிவைத்து இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் பலர் காயமடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், தாக்குதலை ஈரான் நடத்தியிருக்கலாம் என சந்தேகம் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

ஜெருசலேம்

## "ஈரானின் தாக்குதலை எதிர்கொள்ளத் தயார்"

### இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

ஈரானின் எத்தகைய தாக்குதலையும் சந்திக்கத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஈரானில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா தலைவர்கள் அடுத்தடுத்து மரணமடைந்ததைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த படுகொலைகளுக்கு இஸ்ரேலே காரணம் என கூறப்படும் நிலையில், அதன்மீது போர் தொடுக்க ஈரான் மற்றும் அதன் ஆதரவு நாடுகள் ஆயத்தமாகி வருகின்றன.



இந்நிலையில், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா, ஏமனில் உள்ள ஹவுத்தி அமைப்பினர் மற்றும் ஈரான் இராணுவம் ஆகியவை ஒரே நேரத்தில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஆயத்தமாகி வருவதாக கூறப்படுகிறது.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு கூறும்போது, "ஈரானின் தீய சக்திக்கு எதிராக இஸ்ரேல் பலமுனை போரில் ஈடுபட்டுள்ளது. ஈரானின் எத்தகையை தாக்குதலையும் சந்திக்க இஸ்ரேல் தயாராக இருக்கிறது" என்று தெரிவித்தார்.

டாக்கா

## "ஷேக் ஹசீனா அரசியலுக்கு திரும்ப மாட்டார்"

### ஊடக சந்திப்பில் மகன் அறிவிப்பு

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இனி அரசியலுக்குத் திரும்ப மாட்டார் என அவரது மகனும் தலைமை ஆலோசகருமான சஜீப் வஜீத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனியார் ஊடகத்திடம் தெரிவித்த அவர், "இவ்வளவு கடின உழைப்புக்குப் பிறகு சிறுபான்மையினர் தனக்கு எதிராகத் திரும்பியதால் ஷேக் ஹசீனா மிகவும் அதிருப்தியடைந்து விட்டார். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகுவது குறித்து ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலோசித்து வந்தார். இனி அவர் அரசியலுக்குத் திரும்பி வரமாட்டார்.



அவர் இந்த நாட்டையே தலைகீழாக மாற்றினார். அவர் ஆட்சிக்கு வரும்போது இது ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக இருந்தது. ஏழை நாடாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது இந்த நாடு ஆசியாவின் அதிகம் வளரும் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

சென்னை

வாங்கிய கடனுக்காக

## மகளை பாலியல் தொழிலில் தள்ளிய தாய்

சென்னையைச் சேர்ந்த தாய் ஒருவர், வாங்கிய கடனை செலுத்துவதற்காக தனது 16 வயது மகளை பாலியல் தொழிலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த தாய், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கணவனைப் பிரிந்து தனது மகளுடன் தனியே வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில், பணத்தேவையால், பாலியல் புரோக்கரான ஒருவரிடம் 40 ஆயிரம் ரூபாய் பணத்தை வட்டிக்கு வாங்கியுள்ளார். அவரால் சொன்னபடி பணத்தை திரும்ப கொடுக்க முடியாததால் பணத்திற்கு பதிலாக தனது மகளை புரோக்கரிடம் ஒப்படைத்துள்ளார்.

வேலைக்குச் செல்வதாக நினைத்து சென்ற சிறுமிக்கு அடுத்தடுத்த அதிர்ச்சிகள் காத்திருந்துள்ளன. கடந்த 2021ஆம் ஆண்டு தொடங்கி 2023ஆம் ஆண்டு வரை சிறுமி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளார்.



இதனையடுத்து சிறுமி, அங்கிருந்து தப்பித்து தனது தாயை நாடிச் சென்றுள்ளார். ஆனால் அவர், சிறுமியை அழைத்துச் சென்று மீண்டும் புரோக்கரிடமே ஒப்படைத்துள்ளார்.

பின் அங்கிருந்து மீண்டும் தப்பித்த அச்சிறுமி, உறவினர் ஒருவர் உதவியுடன் கடந்த 8 மாதங்களாக மணலி பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு சிறுமியைத் தொடர்புகொண்ட அவரது தாய், மீண்டும் அவரை பழைய இடத்துக்கு செல்லுமாறு கட்டாயப்படுத்தியுள்ளார். தனது தாயே தன்னை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள் என அறிந்திருந்து மனமுடைந்த சிறுமி, இது குறித்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த பொலிஸார் சிறுமியின் தாய் மற்றும் குறித்த புரோக்கர் உள்ளிட்ட கும்பலை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



இன்று மூன்றாவது போட்டி:

# இந்தியாவை வெல்லுமா இந்தியா?

இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி சமநிலையில் முடிவடைந்ததுடன், இரண்டாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியில் இந்தியா கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையிலுள்ளது.

அணித்தலைவர் றோஹித் ஷர்மா தவிர ஏனைய துடுப்பாட்டவீரர்கள் அனைவரும் மிகவும் மேம்பட்ட நிலையில் ஆடினாலே வெற்றி சாத்தியமாகலாம். குறிப்பாக விராட் கோலி, லோகேஷ் ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர் உள்ளிட்டோரிடமிருந்து நீண்ட இனிங்ஸ் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இத்தொடரில் இன்னும் விளையாடாத றிஷப் பண்ட், ரியான் பராக், ஹர்ஷித் ராணா, கலீல் அஹ்மட் ஆகியோருக்கும் வாய்ப்பு கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இலங்கையணியில் மாற்றமெதுவும் இருக்காதென நம்பப்படுகிறது.

## பரிஸ் 2024: தங்கப் பதக்கங்களை தவறவிட்ட பைல்ஸ்

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கில் திங்கட்கிழமை (05) நடைபெற்ற போட்டிகளில் தங்கப் பதக்கங்களை ஐக்கிய அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் தவறவிட்டுள்ளார்.

தள உடற்பயிற்சிப் போட்டியில் தவறுகளை பைல்ஸ் விட்டிருந்த நிலையில் 14.133 புள்ளிகளையே பெற்று வெள்ளிப் பதக்கத்தையே பெற்றார். 14.166 புள்ளிகளைப் பெற்ற பிரேஸிலின் றிபெக்கா அன்ட்ரேட் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். இதேவேளை, பீம் வகைப் போட்டிகளில் ஐந்தாமிடத்தையே பைல்ஸ் பெற்றிருந்தார்.



## கிழக்கின் சதுரங்கத்தில் ராஜாக்களாக கல்முனை சாஹிரா

அஸ்ஹர் இப்றாஹிம்



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட சதுரங்கத்தில் ஆண்களுக்கான 20 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட பிரிவில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி சம்பியனாகி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எம்.சுஹ்தான், பாடசாலையின் சதுரங்க விளையாட்டு பொறுப்பாசிரியர்களான எம்.வை.எம்.றகீப் மற்றும் எச்.எம்.ஜெமீன் ஆகியோரை வாழ்த்துவதோடு, 20 வயதுக்குட்பட்ட பிரிவின் ஐ.எம்.சம்லி சாஹி, எம்.ஏ.தமீம், எம்.என்.எம்.றீமாஸ், ஏ.ஆர்.ஏ.சிமர், எம்.ஏ.ஏ.அல்பர், எம்.எம்.அஹ்சப் ஹபி, ஏ.ஆர்.ஏ.றாசிம் மற்றும் 17 வயதுக்குட்பட்ட பிரிவின் எம்.இஷட், எம். சானிப், ஐ.கேஎம். ஆக்கில் கான், ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத், எம்.ஜே.ஐ.சஹ்மி, ஏ.அர்ஹம் பர்வீஸ், என். அப்துல்லாஹ் சப்கி, எம்அம்ஹர் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டம்:

## தேசியத்தில் இராகலை உயர் தேசிய பாடசாலை

பி.கேதீஸ்

மத்திய மாகாண மட்டத்தில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் வலப்பனை வலயத்துக்குட்பட்ட இராகலை உயர் தேசிய பாடசாலை முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை ஆகஸ்ட் 07, 2024, இல. 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.